## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி

## அ.வ.எண்.28/2020

இந்நீதிமன்ற எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்யப்பட்டு வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2026 ஆண்டு பிப்ரவரி மாதம் 24 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : ராஜேஷ் குமார் | மதம் | : இந்து |
| த/பெ | : பத்மநாப நாயுடு | ஜாதி | : -- |
| வயது | : 48 | கிராமம் | : திருத்தணி |
| தொழில் : | வியாபாரம் | வட்டம் | : திருத்தணி |

**24.02.2026**
**வா.சா. 1 திரும்ப அழைக்கப்பட்டு முதல் விசாரணை தொடர்ச்சி**

6. பிராதுப்படி தீர்ப்பு செய்ய வேண்டுமாய் பிரார்த்திக்கிறேன்.

**<u>குறுக்கு விசாரணை 7, 8 பிரதிவாதிகள் தரப்பில்</u>**

1. நான் இந்த வழக்கில் 7, 8 பிரதிவாதிகளுக்கு எதிராக எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் புல எண் தெரியுமா என்றால் புல எண்.45/9 ஆகும். 1999ல் லட்சுமியம்மாள், லலிதம்மாள் ஆகியோர் ஜெயந்திக்கு செட்டில்மெண்ட் செய்ததாக வில்லங்க சான்றில் பதிவு உள்ளது என்றால் ஆமாம். செட்டில்மெண்ட்டின் அடிப்படையில்தான் வழக்கு சொத்திற்கு அதற்கு அடுத்த பத்திர பதிவுகள் சார்பதிவகத்தில் நடைபெற்றுள்ளது என்றால் சரிதான். அனைத்து ஆவணங்களிலும் முறையான பதிவு கட்டணம் செலுத்தப்பட்டு சரியான நடைமுறையின் அடிப்படையில்தான் 8ம் பிரதிவாதி பத்திரம் பதிவு செய்துள்ளார் என்றாலும் நாங்கள் 7, 8 பிரதிவாதிகள் மீது தேவையற்று பொய்யாக தாக்கல் செய்த இந்த வழக்கு சட்டப்படி செல்லாது என்றாலும் சரியல்ல.

2. பதிவு சட்டத்தின்படி 8ம் பிரதிவாதி மீது நான் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. அனைத்து பதிவுகளும்

பதிவு சட்டத்தின்படி முறையான நடைமுறைகளை பின்பற்றி அனைத்து பத்திர பதிவுகளும் செய்யப்பட்டுள்ளதால் என் வழக்கு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

(குறுக்கு விசாரணை 1, 2 பிரதிவாதிகள் தரப்பில் ஒத்திவைக்கப்படுகிறது)